## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. பரிணாமத்தின் வழிமுறை ______________.

அ. நேரடியானது

ஆ. மறைமுகமானது

இ. படிப்படியானது ஈ. விரைவானது

2. தான்சானியா ______________ கண்டத்தில் உள்ளது.

அ. ஆசியா ஆ. ஆப்பிரிக்கா

இ. அமெரிக்கா ஈ. ஐரோப்பா

### II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. கூற்று : உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.

காரணம் : தட்பவெப்ப நிலை மாற்றமே

அ. கூற்று சரி.

ஆ. கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.

இ. கூற்றும் காரணமும் சரி. ஆனால் பொருத்தமான காரணம் அல்ல.

ஈ. கூற்றும் காரணமும் தவறானவை.

### III. தவறான இணையைக் கண்டுபிடி.

அ. ஆஸ்ட்ரலோபிதிகஸ் - இரு கால்களால் நடப்பது

ஆ. ஹோமோ ஹபிலிஸ் – நிமிர்ந்து நின்ற மனிதன்



LIVEWORKSHEETS

இ. ஹோமோ எரக்டஸ் – சிந்திக்கும் மனிதன்

ஈ. ஹோமோ சேப்பியன்ஸ் – முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது

## IV. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை ______________ உலகின் பார்வைக்குக் கொண்டுவந்தார்கள்.
2. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் _____________ வாழ்க்கை வாழ்ந்தார்கள்.
3. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் _____________ மற்றும் ___________ ஆகும்.
4. ___________ கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியது.
5. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள __________ என்னுமிடத்தில் காணப்படுகின்றன.

## V. சரியா, தவறா?

1. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும்.
2. ஹோமோ எரக்டஸ் மனிதர்களுக்கு நெருப்பு குறித்த அறிவு இருந்தது.
3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.
4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு.

## VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி

1. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களின் காலத்தை அறிய என்ன முறை பயன்படுகிறது?
2. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள்?

LIVEWORKSHEETS

3. தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?

4. நிலத்தை உழுவதற்கு எந்த விலங்கு பயன்படுத்தப்பட்டது?

5. மனிதர்கள் எப்போது ஒரே இடத்தில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள்?

LIVEWORKSHEETS

XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| ___________கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு பானை செய்வதை எளிதாக்கியது. | பண்டப்பரிமாற்ற முறை என்பது _____________ ஆகும். | தொடக்க கால மனிதர்கள் வேட்டைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களில் இரண்டைக் கூறு.<br>விடை |
| ஆயுதங்கள் செய்வதற்கு ஏற்ற கல் எது?<br>விடை: | நகரங்களும் பெரு நகரங்களும் __________ மற்றும் __________ ஆகியவற்றால் தோன்றின. | மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எது?<br>விடை: |
| பாறை ஓவியங்களில் உள்ள உருவங்களை அடையாளம் காணவும்.<br>விடை: | தொடக்க கால மனிதர்களின் முதன்மையான தொழில் எது?<br>விடை: | குகை ஓவியங்கள் மூலம் நாம் என்ன அறிந்துகொள்கிறோம்?<br>விடை: |
| தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?<br>விடை: | _________ தொல்லியல் துறையுடன் தொடர்புடையது. | தொடக்க கால மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளில் இரண்டைக் குறிப்பிடு.<br>வி |

LIVEWORKSHEETS